# காஞ்சி

நிறுவனர்

அண்ணாதுரை


13-10-68

விலை 20 காசு



# சாதாரண நோய்களிலிருந்து நிம்மதியான நிவாரணம் பெற...





**தலைவலி:**
நெற்றியிலும் பொட்டிலும் அமிர்தாஞ்சனத்தை அழுத்தித் தேய்க்கவும்.

**மூட்டு வலி:**
வலியுள்ள மூட்டு பாகங்களில் அமிர்தாஞ்சனத்தை நன்றாக அழுத்தித் தேய்க்கவும்.

## அமிர்தாஞ்சனம்

75 வருடங்களுக்கும்
மேலாக புகழ் வாய்ந்தது




AM 3a



நட்பின் பெருந்தகைமைக்குத் தரப்படுகின்ற இருக்கையானது, அது எந்தத் திசையிலும் திரிபுபடாமல் சிறப்பிக்கப் பெறுகின்ற தன்மையே யாகும்.

—குறள் (789)


# காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 10 ஆறுமாதம் ரூ. 5

மலர் 5 13—10—68 இதழ் 12


# நன்றி, டாக்டர், நன்றி!

தமிழக முதலமைச்சர் அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களைப் பற்றிய மனமகிழத் தக்க செய்திகள், அமெரிக்காவிலிருந்து ஏடுகள், இதழ்கள், தொலைபேசி மூலமாகவும் கிடைக்கக் கிடைக்க, தமிழக மக்களின் இதயமெலாம் இன்ப ஊற்றெடுத்து அவர் தம் உதடுகள் அனைத்தும் தம்மையறியாமலேயே, "டாக்டர் மில்லர் வாழ்க!; பல்லாண்டுக் காலம் வளம் பல பெற்று வாழ்க!" என்ற சொற்களை உதிர்த்துக் கொண்டிருக்கவே செய்கின்றன.

உலகத்தின் பல பாகங்களில் பரவலாகவும், இந்தியத் துணைக்கண்டத்தில் பெரும்பான்மையாகவும் குறிப்பாகத் தமிழகத்தில் வாழ்கின்ற அத்துணை மக்களும் இன்று டாக்டர் தியோடர் மில்லர் அவர்களது பெயரைச் சொல்லி, இன்புறுகிறார்கள் என்றால், அந்தப் பெயருக்குரியவரின் ஒரு மருத்துவச் செயல் அந்த அளவுக்குப் பாராட்டுக் குரியதாக இருக்கிறது என்பதுதான் பொருள்.

அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களது சிந்தனை ஓட்டத்தையும், செயலாற்றலையும் இயன்ற அளவுக்கு முடக்கிக்கொண்டு வந்த அந்த நோயை டாக்டர் மில்லர் அவர்களும் தமிழக டாக்டர் சதாசிவம் அவர்களும் முடக்கி வைத்து, "சாவே உனக்கொரு நாள், சாவு வந்து சேராதோ!" என்ற பழம் பாடல் ஒன்றின் பொருளைத் துல்லியமாக செயற்படுத்திக் காட்டி இருக்கிறார்கள்!

முதலமைச்சர் அவர்களது நோய் வாதை அதிகப்பட்டுப் போய் சென்னை தலைமை மருத்துவமனையிற் சேர்க்கப்பட்டு, அங்குள்ள மருத்துவ வல்லுநர்களால், "அண்ணா அவர்கள் அமெரிக்காவுக்கு சிகிச்சைக்கு அனுப்பப்படவேண்டும்" என்று ஒருமித்த கருத்துக்கு உடன்பட்டுரைத்தபோது, துணுக்குறாத நெஞ்சங்கள் எதுவும் தமிழகத்திலிருக்க முடியாது.

நோயின் கடுமை அத்தகையதா? என்று அஞ்சி அழுதோரும்; அந்த அளவுக்கு அபாயகரமான நிலையா? என்று கலங்கித் தவித்தோரும் கோடி கோடி தமிழகத்தில்!

சென்ற திங்கள் 20-ம் நாள் வரையில் தமிழ் மக்கள் அத்தனைப் பேருடைய ஒட்டு மொத்தமான கவனமும் அமெரிக்காவின் பக்கத்திலே நின்று கொண்டிருந்தது. "இனி அஞ்சவேண்டியதில்லை" என்ற அறிவிப்புக் கேட்ட பின்னரே ஊணும் உறக்கமும் கொண்டோர்கூட பல்லாயிரக் கணக்கானோர் உண்டு.

மனிதன் ஒருவன் பிறப்பெடுக்கும் போதே, நோய்த் துன்பங்களும், கவலைத் துயரங்களும் அவனைக் கப்பிக் கொண்டிருப்பதென்பது உலக வியற்கையாகிவிட்டிருக்கிறது. பொதுத்துறையிலீடுபட்டிருக்கிற ஒருவருக்கு இது போன்ற ஒரு நோய்க் கொடுமை என்றால் நொந்து போகின்ற நெஞ்சங்கள் கோடி! கோடி!! சிறப்பாக அண்ணா அவர்களைப் போன்ற உலகப் பொது மனிதர் ஒருவரது நிலை அபாய கட்டத்திலிருக்கிறதென்றால் அகிலமே கவலையுடன் கண்ணீர் சிந்தத் தொடங்குவதில் வியப்பில்லை. அந்தக் கண்ணீரை மாற்றி இன்பக் கண்ணீர் சுரக்கச் செய்கிறார் ஒருவர் என்றால் அந்த அவருக்கு தொடர்புடைய அத்தனைப் பேரும் உயிருள்ளளவும் நன்றிக் கடமையுடையவர்களாகிறார்கள்!

அந்த வகையில்தான், பேரறிஞர் அண்ணா அவர்களது நோயை அறுவைச் சிகிச்சை மூலம் அகற்றி, கோடிக் கணக்கானோரின் நினைவில் நிலைத்து நின்று விட்டிருக்கும் டாக்டர் தியோடர் மில்லருக்கு அண்ணா அவர்கள் இந்த இதழின் நிறுவனர் என்ற வகையில் நம்முடைய நன்றியைப் படைத்துக்கொள்கிறோம்.

அறிஞர் பெருந்தகை அவர்களது நலங்கோரி அலுவலகத்துக்கு எழுதிய ஆயிரக் கணக்கானவர்களின் சார்பிலும் தமிழக முதலமைச்சர் என்ற வகையில் தமிழகத்தின் சார்பிலும் டாக்டர் மில்லருக்கும், தொடர்புடைய அனைவருக்கும் நம் நன்றியைக் கூறிக்கொள்வதிலே பெருமையும், பெருமிதமும் கொள்கிறோம்.

அமெரிக்கத் தலைநகராம் நியூயார்க் நகரத்தில் அமைந்துள்ள புகழ்ப்பெற்றுள்ள மெமோரியல் மருத்துவ மனையில் பெரும் புகழ்க்குரியராய் இருக்கும் டாக்டர் மில்லர், கடந்த 1966-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் இறுதியில் தமிழகத்தின் தலைநகரிலும், தலைநகரை அடுத்த வேலூரிலும் வந்து தங்கி இருந்திருக்கிறார்.

வேலூர் அமெரிக்கன் மருத்துவமனையில் ஒரு கிழமை வரையில் தங்கி, புற்றுநோய் தொடர்பான விவரங்களையும் சிகிச்சை முறைகளையும் மருத்துவர்களுக்கு விளக்கி இருக்கிறார் என்பதையும், இதுபோல் சென்னை மருத்துவமனையிலும் தங்கி இருந்தார் என்றும் தெரிய வருகிறது இப்போது.

1966 ஜனவரி 29-ல் சென்னையில் டாக்டர் மில்லருடன் தொடர்புகொண்டிருந்த டாக்டர் ஒருவர்—

> டாக்டர் மில்லர் அவர்களுடைய முகத் தோற்றத்திலேயே களங்கமற்ற ஒருவித பெருந்தன்மை இருந்ததைக் கண்டேன்.
>
> அவருடைய சின்னஞ்சிறு நீலவிழிகள் உண்மையிலேயே ஆய்வுத்திறன் உடையவை!
>
> பெரிய மருத்துவமனைகளில் காணப்படும் ஒரு அறுவை மருத்துவ நிபுணரைப்போல்

(14-ம் பக்கம் பார்க்க)

# அரச மரம்

—இறைவன்—

வில்தேடி புருவத்தை அமைத்து; நாவல்
விழிதேடி வைத்தமகள் என்மனைவி
கல்தேடி நெல்தேடி அரிசி தன்னைக்
கைமுறத்தால்புடைத்துக்கொண் டிருந்தாள்'தேர்ந்த
சொல்தேடி பொருள்தேடி கவிதை யென்னும்
தொழில்செய்துக் கொண்டிருந்த நானோ; நல்லப்
புல்தேடி அலைகின்ற பசுவைப் போன்று
புதுஉவமை தனைதேடி அமர்ந்தி ருந்தேன்!

புடைத்திட்டக் கல்உமியைப் புறக்க டையில்
போட்டுவிட்டுத் திரும்பிவந்த என்மனைவி
இடைத்தட்ட நடந்துவந்து அருக மர்ந்தாள்!
இடைவெளியும் குறைந்ததினால் 'அழகு' என்னும்
படைத்தட்ட நான்திரும்பிப் பார்த்தேன்! கொவ்வைப்
பழத்தட்டை என்முன்னர் நீட்டி, "பாவைப்
படைத்திட்டப் பாவலரே! கொஞ்சம் இந்தப்
பாவையினைக் கண்ணெடுத்துப் பார்ப்பீர்"என்றாள்!

"பார்வையினால் போதைதரும் கள்ளே! இன்பப்
பாய்விரிக்கும் காவிரியே! தினமும் என்னை
வேர்வையினால் குளிப்பாட்டும் பெண்ணை ஆறே!
வீண்பேச்சுத் தேவையில்லை! கனியு தட்டுக்
கோர்வையினால் பாலாற்றை இறக்கு" என்றேன்!
குளிர்கின்ற காலத்தில் மேனி என்னும்
போர்வையினால் கதகதப்பை ஊட்டும் நங்கை
புன்னகைத்து "தோள்மீது வைகை" என்றாள்!

கடைத்திறப்பைக் கற்றவளின் தோளின் மீது
கைவைத்து அணைத்தபடி "இரவுப் போழ்தில்
உடைதிறப்பைச் செய்வதினால் பருவங் கொஞ்சும்
உடல்சிறப்பைக் காட்டுகின்ற பெண்ணே!செந்தேன்
அடைதிறப்பை இதழ்மூலம் காட்டு" என்றேன்!
அளிப்பதினால் சுகங்கண்ட வள்ளல் போன்று
கொடைதிறப்பைச் செய்துநின்றாள்! புலவன் ஆனேன்!
கொடியிடையாள் தன்மீதோர் கவிபா டென்றாள்!

"பாட்டுதனை வளர்க்கின்ற கார ணத்தால்
பாவையென வளர்ந்தவளே! இன்பம் என்னும்
ஏட்டுதனைப் புரட்டிடவே இடம ளித்து
என்கரத்தில் படுப்பவளே! இமைகள் என்னும்
பூட்டுதனைத் திறந்திடும்உன் விழியில் வேல்கள்
புறப்பட்டுப் புறப்பாட்டுப் பாடும்! செந்தேன்
கூட்டுதனைக் காக்கின்ற கனியு தட்டில்
அகப்பாட்டோ அகப்பட்டுக் கொள்ளும்" என்றேன்!

"வஞ்சியரின் வழிவந்தக் கார ணத்தால்
வஞ்சிப்பா ஆனவளே! கலிப்பா போன்று
மிஞ்சிவரும் சிரிப்பினிலே துள்ள லோசை
மிகுந்துவரச் சிரிப்பவளே! பிறத லைகள்
அஞ்சிவர சேராத வெண்பா போன்று
அருங்கற்பை உடையவளே. அழைத்த போது
கொஞ்சிவரும் ஆசிரியப், பாவை போன்று
கூடவரும் பெண்ணணங்கே! நாற்பா நீயே!"

"உன்கூந்தல் நெடுந்தொகையே! துளையு டைய
ஊசிவழி நுழையுமிடைக் குறுந்தொ கையே!
முன்மார்பு என்னதொகை?" என்றேன்! நாணி
முகஞ்சிவக்கத் தலைகுனிந்த என்மனைவி

"என்மார்புப் பெருந்தொகையே! ஐயம் என்ன?
இதுவுமக்குத் தெரியாதா?" என்றாள் நானோ
"கன்னங்கள் எனக்குஎட்டுத் தொகையே!" என்றேன்!
கன்னியவள் சிரித்தபடி "உண்மை" என்றாள்!

வேர்திருத்தம் இல்லாத மரத்தைப் போன்று
விழுந்துவிட்ட என்மனைவி அணைத்துக் கொண்டே
"சீர்திருத்தம் பேசுகின்ற உம்மு டைய
சிந்தனைக்கு ஓர்விருந்து" என்றாள்! நன்குக்
கூர்திருத்தம் செய்திட்ட விழிவேல் கொண்டு
குத்துகின்ற எழிலணங்கே! உழுது மண்ணை
ஏர்திருத்தம் செய்வதுபோல் உன்ஐ யத்தை
எழில்திருத்தம் செய்கின்றேன்! சொல்வாய்!என்றேன்

"பிள்ளையொன்று வேண்டுமென்று எதிர்த்த வீட்டுப்
பெண்சென்று அரசமரத் தடியி ருக்கும்
பிள்ளையாரைச் சுற்றுகிறாள்! எங்கே யேனும்
பிள்ளையாரும் தருவாரா பிள்ளை?" என்றாள்!
"கள்ளிறக்கும் பனைமரமே! வீணே வெற்றுக்
கல்லினைப்போய் சுற்றுவதால் பயன்தான் என்ன?
பள்ளியறைக் கணவனைப்போய் சுற்றி னாலும்
பயனுண்டு! குழந்தையொன்று பிறக்கும்!'என்றேன்

"அரசமரப் பிள்ளையாரைச் சுற்றி வந்தால்
அழகான ஓர்குழந்தை பிறக்கும் என்று
உரைசெய்த முன்னோர்சொல் பொய்யா?" என்றாள்!
"உப்பைப்போல் சிரிப்பவளே! மலட்டுப் பெண்கள்
அரசமரம் சுற்றிவந்தால் மலடு நீங்கி
அழகானக் குழந்தையினைப் பெற்றெ டுப்பர்!
நரைமுடித்த நம்முன்னோர் ஆய்ந்து சொன்ன
நல்லதொரு அறிவியலின் விளக்க மாகும்!"

"நெருங்கியிருக்கும் படிதொடுத்த முல்லைப் பூவே!
நினைத்தவுடன் ஓடிவரும் விருத்தப் பாவே!
கருவருக்கும் கிருமிவயிற் றிருந்தால் பிள்ளைக்
கருத்தோன்ற வழியில்லை! மலடி ஆவர்!
கருவறுக்கும் கிருமியினை அழிக்கும் ஆற்றல்
கலந்துவரும் அரசமரக் காற்றுக் குண்டு!
அருகிருந்து அக்காற்றை நுகர்ந்தால், கொண்ட
அம்மலடு நீங்கிவிடும் பிறக்கும் பிள்ளை!"

"அறிவியலின் அடிப்படையில் இதனை முன்னோர்
ஆய்ந்தாய்ந்து சொன்னார்கள்! ஆனால் இன்றோ
அறிவற்ற முறையினிலே பிள்ளை யாரை
அரசமரத் தடியினிலே வைத்து நாளும்
முறையின்றிக்;கொழுக்கட்டைச் சுண்டல் செய்து
மூன்றுமுறைச் சுற்றுகின்றார்! ஐயோ பாவம்!
அறிந்தறிந்து சொல்லியநம் முன்னோர் சொற்கள்
அர்த்தமற்று போயிற்றே இன்று!" என்றேன்!

"முள்கழிக்கும் கத்தியைப்போல் மடமை தன்னை
முறிப்பவரே! அரசமரத் தடியி ருக்கும்
பிள்ளையாரைச் சுற்றுவதால் குழந்தை ஒன்று
பிறந்திடுமோ? பிறக்காதோ? கணவன் என்னும்
பிள்ளையாரைச் சுற்றிவந்தால் குழந்தை ஒன்று
பிறந்துவிடும் நிச்சயம்நான் அறிவேன்!" என்றாள்!
"பள்ளியறை அனுபவமா?" என்றேன்! நாணிப்
பாவையவள் வெட்கத்தால் தலைகு னிந்தாள்!



# விடிந்தும் விடியாத....

உதயை.மு.வீரையன்.

அவள் நினைத்து நினைத்து தனக்குள் தானே பொருமாத நாளில்லை. ஆனால் வாய்விட்டு அழுததில்லை!

தன் நெஞ்சத்தை விட்டுப்பீறிட்டு எழும் உணர்ச்சி அலைகளை — உள்ளக் குமுறல்களைத் தன்னால் அடக்க முடியாமல் அல்லல்படும நாட்கள் ஒன்று இரண்டா?......கண்களின் விளிம்பில் தேங்கி நின்றுவிடும் அந்தத் துயரத் துளிகளைத் துடைக்கவும நினைவற்று மறைக்கவும் செயலற்று வாழும் வாழ்க்கையல்லவா இது?

என்ன செய்வது? குற்றம் தன்னிடம் இருக்கும்போது அதை யாரிடம் கூறி அழுவது?

அழுவதினால் அந்தக் குற்றம் மன்னிக்கப்படுமானால் தன் வாழ்நாளெல்லாம் அழுதுகொண்டிருக்க அட்டியில்லை!

சரியாக அந்த இரவு பத்து மணி வந்துவிட்டாலே அந்த நினைவும் வந்துவிடுகிறது. இன்றும் அந்த நேரத்துக்கு அந்த நினைவு வந்து அவள் நெஞ்சில் நின்றுவிட்டது.

மெதுவாக எழுந்தாள்; தன் சின்னஞ் சிறு குச்சு வீட்டின் தட்டிக் கதவைத் திறந்துகொண்டு எட்டிப் பார்த்தாள்; 'இன்றுகிலும் அவர் வரமாட்டாரா?...'

அந்தப் பேதை உள்ளத்துக்கு எவ்வளவு சபலம்?... இந்தச் சபலத்தில் வாழ்பவர்களே பெண்கள் தானோ?...'-அவள் தன்னைத் தானே சாட்சியாக்கிக்கொண்டு வினவை எழுப்பிக்கொண்டாள்!

இருமல் சத்தம் கேட்டது. எதிர் வீட்டுத் தாத்தா எப்போதும் அந்த நேரத்துக்கு வராமல் போவதில்லை!

''என்னடி கண்ணு! முகம் வாடிக் கிடக்கு?...''

''ஒன்றுமில்லையே தாத்தா...''— எப்போதும்போல ஒரு சிரிப்பை முகத்தில் தவழவிட்டுக் கொண்டாள், கண்ணம்மா, இது அவளுக்குப் பழகிப்போன ஒன்று!

''மறைச்சு மறைச்சு மனதிலே போட்டு அடைச்சி அடைச்சிஎன்ன காணப் போறே?...பொண்டாட்டிப் புள்ளைக்குச் சம்பாதிச்சுப் போட வக்கில்லாம அவனே பயந்துகிட்டுப் போயிட்டான்......வர்றதா இருந்த இந்த நாலு வருஷத்திலே வந்திருக்க வேண்டாமா?...அந்த மூங்கிக் காட்டிலே கிடந்த பொணம் அவனுத்தான் இருக்கணும்கிறதில் இன்னுமா சந்தேகம்?...கையிலே காசில்லாமலும், உடம்பிலே பலமில்லாமலும் இந்த உலகத்திலே ஒருத்தன் வாழத்தான் முடியுமா?...''

''என்னமோ தாத்தா! அவரு இந்த உலகத்திலே இல்லேங்கிறதை நான் நம்பினாலும் என் மனசு நம்ப மாட்டேங்குதே!...''

''உன் மனசும், மண்ணாங்கட்டியும்! இப்படி சொல்லியே காலத்தை ஓட்டிட்டே ... ஒண்டிக்கட்டையாக் கிடந்து எவ்வளவு நாள் தொல்லைப் படப் போறே?...''

''நான் செய்த குற்றத்துக்கு நான் தானே தண்டனையை அனுபவிக்கணும்...''

''என்னமோம்மா...ஆள்துணையே இல்லாம இளவயசுப் பொண்ணு தன்னந் தனியா இருக்கிறது அவ்வளவு நல்லதில்லை. சாயந்திரமானதும் அந்தப் பொட்டிக் கடை சுந்தரம் உன்னை முறைச்சு முறைச்சுப் பாக்கிறதும், சீட்டி அடிக்கிறதும் நான் பாக்காம இல்லே...''

கண்ணம்மா பேசவில்லை. சிந்தனை வளையம் அவளைச் சிறையிட்டு விட்டதோ?

பெரியவர் விடைபெற்று எப்போது போனாரோ? திரும்பி உள்ளே பார்த்தாள். தன் மகன் அமைதியாகத் தூக்கத்தில் ஆழ்ந்து கிடந்தான். அவளுடைய அமைதி எல்லாம் அங்கே குடிபோய் விட்டதோ?

படுக்க நினைத்தாள். தூக்கமா வரப் போகிறது? எப்போதும் துணைக்கு வந்து படுக்கும் அந்தப் பாட்டியும் வரவில்லையே! அந்த பாட்டியின் வீட்டை நோக்கி அவள் கால்கள் பொடிநடை போட்டன.

அங்கே பாட்டியோடு யாரோ பேசிக்கொண்டிருப்பது கேட்டது.

''இந்தா பாட்டி.........என்னமோ இப்ப வரவர அவ நடத்தையே எனக்குப் பிடிக்கலை. செத்துப்போன வீட்டுக்காரன் இருக்கிறான்னு சொல்லிக்கிறதும், அந்த நினைப்பிலே பூவும் பொட்டும் வச்சிக்கிறதும்............அவன் இருந்த வரைக்கும் கைவண்டி இழுத்து கண்ணியமா வாழ்ந்தான். காயம் பட்டுப்பூட்டான்னு—சம்பாதிக்க முடியலேன்னு விரட்டிவிடுறதும், அவனையே நினைச்சுக்கிட்டு இருக்கிறதா சொல்லி அந்தப் பொட்டிக் கடை சுந்தரத்தைச் சுத்திவர்றதும் ......ஐயையே...சகிக்கலை...''

பேசுவது தன்னைப்பற்றித்தான் என்பதை ஊகிக்க அவளுக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை. அதுவும் தன்னுடன் பழக்கூடைத் தூக்கிச் சுற்றி வரும் அவளா இப்படி...? ஊரிலே பேசிக்கொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டதை இப்போது தன் காதுகளாலேயே......



திரும்பிவிட்டாள். விழி நீரைத் துடைத்துக்கொண்டு தூக்கம் வராமல் படுக்கையில் புரண்டுகொண்டேயிருந்தாள். எப்போது தூங்கினாளோ?......

புரண்டு படுத்தாள். தூக்கக் கலக்கத்திலும் துணைக்கு வந்து படுக்கும் அந்தப்பாட்டி வந்துவிட்டாளா என அறிய ஓர் ஆவல். விளக்கொளியையே காணோம்!

தன் நினைவு கொஞ்சம் கொஞ்சமாக மிகுந்து விழிப்பு தோன்றியபோது தன்னை யாரோ இதமாகத் தழுவிக் கொண்டிருப்பதையும், அந்த அணைப்பிலிருந்து விடுபட எழுந்தபோது, "கண்ணு! நான் தான் உன் மச்சான்!......" என்ற மெல்லிய ஒலியையும், தன் காதுகளையே நம்பமுடியாமல் உணர்ச்சி வசப்பட்டுத் தானும் தழுவிக்கொண்டதையும் ஒருசில மணித்துளிகளில் நடந்துவிட்ட புதிர்களாகவே கொள்ளவேண்டும்!

காணாமல் போனவன் தன் கைச்சிறையில் வீழ்ந்து கிடக்கும் மகிழ்ச்சியும், அதையும் மீறி எங்கே இத்தனை ஆண்டு கழித்து வந்தவன் போய்விடப் போகிறானோ என்ற பயமும் சேர்ந்து நான்காண்டு பிரிவுத் துன்பத்தையும் அந்த ஒரு கணத்தில் அனுபவித்தே தீருவது என்று முடிவு கட்டிவிட்டாளோ?......

எப்போது வந்தான்?...எப்படி வந்தான்?...இத்தனை ஆண்டுகாலம் என்ன செய்து கொண்டிருந்தான்? எங்கே இருந்தான்?...இந்த அற்ப கேள்விகளைக் கேட்டு அந்த சொற்ப நேரத்தை வீணாக்க அந்தப் பேதை நெஞ்சம் ஒப்பவில்லை!

ஆடைகள் கசங்கும் சலசலப்போடு தன் மீது கவிழ்ந்து கொள்ளும் அந்த இன்பச் சுமையை நெஞ்சோடு ஏற்றுக்கொண்டு 'ஏங்க பாட்டி.........?" என்ற பொருள் பொதிந்த கேள்வியை அவன் காதோரம் கிசுகிசுத்தாள்.

"வரலை..."—அவன் அதற்கு மேல் பேசவே விரும்பவில்லை என்று குரலே எடுத்துக் காட்டிவிட்டது.

நான்காண்டு பாலைவன வாழ்வுக்கும், திடீரென வந்துவிட்ட பசுஞ்சோலை வாழ்வுக்கும் போராட்டம் நடந்து கொண்டிருந்தது. அந்தப் போராட்டம் எப்போது ஓய்ந்ததோ!

தட்டிக் கதவு தட்டப்படும் ஓசை நின்று நின்று கேட்டது. நீண்ட நேரம் கழித்து அப்போதுதான் கண்ணயர்ந்த கண்ணம்மா விழித்துக் கொண்டாள்.

விடிற்காலை 4—மணி புகைவண்டி நீண்ட ஓலமிட்டுப்போய்க் கொண்டிருந்தசத்தம் அந்தஅமைதியைக் கிழித்துக் கொண்டு மெதுவாக ஒலித்துக் கொண்டிருந்தது.

மீண்டும் கதவு தட்டும் சத்தம்! தன்னைத் தழுவிக் கிடந்த கைகளை மெதுவாக விடுவித்துக் கொண்டு உடையைச் சரி செய்துவிட்டு எழுந்தாள். கதவைத் திறந்து எட்டிப் பார்த்தாள்!

அங்கேபுகைவண்டிக் கரியோடும் கையில் ஏதோ பெட்டியோடும் யாரோ நின்றுகொண்டிருப்பது தெரிந்தது. கண்ணைத் துடைத்துக் கொண்டு ஏறிட்டுப் பார்த்தாள்...... அவளை விட்டுப்போன தொட்டுத் தாலி கட்டிய கணவன்! அப்படியானால் உள்ளே இருப்பது......?

நான்காண்டுகள் கழித்து வந்திருக்கும் தன்னைக் கண்டதும் வியந்துபோவாள் என்றும், விளங்காத இன்பத்தோடு தன் கால்களைப் பிடித்துக்கொண்டு "இனிமேல் எங்கும் போகமாட்டேன் என்று என் தலையில் அடியுங்கள்" எனக் கெஞ்சுவாள் என்றும், "சம்பாதிக்க இலாயக்கில்லைன்னு சொன்னியேடி இதோ பார் நான் சம்பாதித்ததை" என்று கொண்டுவந்த நோட்டுகளை அவள் தலையில் கொட்டிக் குளிப்பாட்டலாம் என்றும் நினைத்து வந்த அவனுக்கு அவள் திக்பிரமையாக நிற்பது பெரும் ஏமாற்றமாகவே போய்விட்டது.

அந்த இரண்டு உள்ளங்களின் மனப்போராட்டத்துக்கு இடையில், மூன்றாவது உருவம் ஒன்று உள்ளேயிருந்து கைலியை இழுத்துக்கட்டிக் கொண்டு தலைமயிரைக் கோதியபடியே அநாயசமாக வெளியே போவதை யாரும் தடுக்கவில்லை.

இருட்டோடு இருட்டாக 'நீதிபதி'யின் முன்னிலையிலேயே நடந்துவிட்ட அந்த மாபெரும் குற்றத்துக்கு இனி என்ன சமாதானத்தைக்

(9-ம் பக்கம் பார்க்க)

பெண்கள் பெரும்பாலும் நம்மை விரும்பி நேசிப்பதில்லை. அவர்கள் ஒரு மனிதனைத் தேர்ந்தெடுப்பது அவனிடம் காதல் கொண்டன்று; அவன் தங்களைக் காதலிப்பது அவர்களுக்கு மகிழ்ச்சியாயிருப்பதால்தான். உலகப் பொருள்கள் அனைத்திலும் அவர்கள் அன்பைத்தான் அதிகமாய்க் காதலிக்கின்றனர்.

—அல்ஃபோன்ஸே கா.

பெண் ஆடவனுக்குக் காட்டக்கூடிய ஆழ்ந்த அன்பு, அவன் தன் கடமையைச் செய்வதற்கு உதவியாக நிற்றல்.

—மூலோக்

# அண்ணாவின் அருஞ்செயல்கள்!

பழந்தமிழின் தாய்ப்பண்பு பூத்துக்காய்த்து
பலகலைகள் கனிந்தினிக்கும் தமிழ்த்தாய்தந்த
குழந்தையண்ணா வெனப்பிறந்து புதுமைதேர்ந்து
கூரறிவின் தம்பிகளோ டுறவுகொண்டு
மழலைமொழி யிளந்தமிழைப் பொழிந்துமக்கள்
மதிநிறைந்த வுளத்தினுளே நிலையாய்நிற்கப்
பழமொழியைக் குழந்தைமொழிப் படைப்பால்நல்கும்
பண்புடைய விளையாட்டு அண்ணாவாழ்க!

வடக்காட்சி சூழ்ச்சியினர் வறுமைதேக்க
வாய்ப்புடைய வாணிபத்தை முடக்குவார்கள்
அடத்தொடமை காங்கிரசி னாட்சிப்போக்கை
அணுவளவும் திருத்திவிட முடியாதென்றே
திடத்துடனே தமிழர்தமைச் சேர்த்தொன்றுக்கித்
தீரமுடன் தமிழாட்சி நாட்டுதற்குப்
படக்காட்சி கலைக்காட்சி மேடைக்காட்சி
பலதுறையில் தமிழறத்தை வளர்த்தாரண்ணா.

பற்றதனைப் பற்றுவதில் அண்ணாபற்று
பழந்தமிழின் சிறந்தபற்று நாட்டின்பற்று
கற்றதனில் கண்டுணரும் கல்விப்பற்று
காணுகின்ற மக்கள்தமின் நண்புப்பற்று
உற்றவரின் கருத்தறியும் நுண்மைப்பற்று
உறுதுணையின் காவலுடை நேர்மைப்பற்று
நற்றிறத்தின் பற்றினொடு நடத்தைப்பற்று
நாநிலத்தி லண்ணாவின் தூயபற்றே.

தூங்கிடும்போ தறிஞர்தமின் தூக்கந்தன்னுள்
தூயநிலை விழிப்பொன்று முந்திநிற்கும்
தூங்கிடுக தூங்கிடற்க என்றவாக்கின்
திருக்குறளை உறங்குவதால் தூய்மைகாப்பர்
தூங்காமல் தூங்குகிற தூக்கமொன்று
துறவோரின் வாழ்க்கைதனில் நிகழக்காண்பர்
பாங்குயரும் பேரண்ணா தூக்கம்சான்றோர்
பண்டறிந்த ஞானநிலைத் துரியமாமே.

அடக்கமதே ஆயிரம்பொன் னென்றுசொல்வார்
ஐந்தடக்க லாமையிடம் காணென்பார்கள்
திடத்தறிவை அடக்கிவைக்க முடியாதென்பார்
திறமையுள்ளோர் அடங்கியிரா ரென்பர்மேலோர்
அடத்துடைய மனக்குரங்கை அடக்கிவைக்க
அருந்தவத்தைக் கற்றோர்கள் முனிவரானார்
இடத்தமைவில் அடக்கமுடைப் பண்புதன்னை
எழிலண்ணா உடலமைப்பே இயல்பாய்க்காட்டும்.

அடுக்குமொழி வடித்தெடுப்பா ரழகுசொல்லில்
அடுக்கடுக்காய் கருத்தணுக்க ளளந்துநிற்கும்
துடுக்குச்சொல் பேசிடுவோர் தூண்டும்சொல்லைத்
துள்ளுநடைப் பேச்சதனில் துண்டம்செய்வார்
அடுத்தடுத்து வீரநடை அமைத்துக்கொண்டு
அறமுறையைச் சரஞ்சரமாய்ப் பொழிந்துநிற்பார்
விடுத்திடுஞ்சொல் வீணர்களின் நெஞ்சிற்பாய்ந்து
விரைந்திடுமே மாற்றெண்ண மனத்தைநோக்கி

கண்கண்ட விடமெல்லாம் பேசிப்பேசிக்
களிப்பதிலே களைப்பறியா உணர்ச்சிமிக்கோர்
எண்ணற்ற மாற்றெண்ணக் களத்துள்புக்கே
எதிருற்ற சொற்போரில் வெற்றிகண்டார்

பண்டுறையும் தமிழறத்தை மறைத்துவைக்கும்
பகையுளத்தை நண்பறத்தால் விளக்கம்செய்தே
வெண்டமிழால் நாடகத்தை நடித்துக்காட்டி
விழிப்புணர்ச்சி தூண்டியவ ரண்ணாதானே.

தண்தமிழைச் சீர்கெடுக்கச் செய்தசூழ்ச்சி
தாரணியில் சிலதல்ல பலவேயாகும்
எண்ணற்ற மொழிச்சொற்கள் தமிழைச்சூழ்ந்து
இணைந்திருத்த லொன்றுகு மினிமைதாங்கும்
திண்தமிழுள் மூடபக்தி திணிப்புமொன்று
திறமைமிகும் தன்மதிப்பு மறைந்ததொன்று
நுண்ணியதாம் தீமைகளின் நுழைவையெல்லாம்
நுணுகியறிந் தறமுறையை நுழைத்தாரண்ணா

வறுமையென்றும் விதியென்றும் வகுத்துக்கொண்டு
வஞ்சனையைப் பாரதமாய் வடித்தெடுத்து
திறமையொடு பலபிளவைத் தமிழ்நூலாக்கி
தென்னகத்தைச் சீர்கெடுத்த மடமைதன்னை
அறவழியின் திருக்குறளினாற்றல் கொண்டு
அரசியலாம் திண்மையுடைப் பணிகளாற்றி
திறலமையா சூழ்ச்சிகளை வீழ்த்திநின்று
செந்தமிழைக் காத்திலரே லென்னாம்நாடு?

தமிழகத்தைத் தமிழ்நாடென் றுரைத்திடற்கு
தமிழனுக்குத் தனியுரிமை கிடையாதென்று
நமைகுறித்துப் பிறநாட்டார் கூறிடற்கு
நாவேது நம்நாடு நமதேயாகும்
தமிழ்நாடு நமிழ்நாடே பிறநாடல்ல
தமிழகத்து மக்களுக்கே உரிமையுண்டு
நமதுரிமை ஆட்சியையெந் நாளும்காப்போம்
நண்புகுறள் வழிநடப்போ மென்றாரண்ணா.

இந்திமொழி நுழைந்திடற்கே ஒப்பமாட்டேன்
இடர்செய்வோ ரீண்டிருப்ப தறிந்தேஉள்ளேன்
முந்துகிறே னெதுவரினும்; வந்திடட்டும்
மூளுகிற பகையெரியா லுயிர்போகட்டும்
சிந்துகிற குருதியினால் தமிழ்வாழட்டும்
சிந்துவரை தரணியெல்லாம் தமிழினாட்சி
நின்றிடவே பணிபுரிவே னிந்திமாயை
நிழல்படவு மீண்டிடத்தைத் தந்திடேனே,

அறிவதனை மயக்குகின்ற மதுவினத்தை
அங்காடி விற்பனையா யாக்கிக்கொண்டு
திறலகற்றும் வீண்சண்டை தீங்குசெய்யும்
தீயவழிச் சச்சரவு களவும்சேர்ந்தே
அறவழியைத் தாக்குவதைக் கண்டகாந்தி
அகற்றினார் மதுக்கடையை யன்பினோடு
புறமுறையில் மீண்டுமதைப் புகுத்தவந்த
புல்லியரைத் தடுத்தண்ணா புனிதரானார்.

ஆங்கிலம்தான் உலகமொழி யென்றேயாய்ந்து
அடுத்ததுணை மொழிதமிழாய்த் தேர்வுசெய்து
தேங்கிநிற்கும் தமிழுணர்வைத் திறமையோடு
தேயமெலாம் கற்றிடவே முறைமைவிண்டார்
ஆங்கிலத்தின் பகுத்தறியும் பொதுமைகொண்டு
அகிலமதை அளந்தறியும் நிறைவுகண்டே
ஆங்கிலத்தைப் பொதுமொழியென் றாக்கித்தந்து
அதனுடனே தமிழதனை இணைத்தாரண்ணா!

—கவிஞர் கி. அரங்கசாமி—

'அண்ணா அறுபது'' என்ற நூலிலிருந்து சில பகுதிகள்.

# இறக்குப் பிழை

—பழநியூரான்—

மூன்றுவது முறையாக விரல்களை விட்டு எண்ணிப் பார்த்தாள் கோகிலம். அவளுக்கும் கண்ணனுக்கும் திருமணமாகி சரியாக எட்டு ஆண்டுகள் உருண்டோடி விட்டன.

இந்த எட்டு ஆண்டுகளிலும் ஒரு எட்டு நாட்களாவது 'போதும்' என்ற சொல்லோடு தன்னால் வாழ முடிந்திருக்கிறதா? நினைத்துப் பார்த்து 'ஊஹூம்' என்று உதட்டைப் பிதுக்கிக்கொண்டாள்.

ஆனால், கண்ணன் மட்டும் என்ன ஊதாரித்தனமாகவா செலவு செய்கிறான்? இல்லை. அவனுக்குவருகின்ற நூறு ரூபாய் வருமானத்தில் இந்த அளவு கௌரவத்தோடுவாழ்வதையே போற்றத்தான்வேண்டும்.

அதனால்தான், கண்ணனது குணங்களை ஏன்? வருமானத்தையே அறிந்து, கோகிலத்தின் தந்தை அவனுக்கு, கோகிலத்தைத் திருமணம் செய்துவைத்தார். தன் மருமகன் அரசாங்க ஊழியன் என்று தனக்குத் தெரிந்தவர்களிட மெல்லாம் சொல்லிச் சொல்லிப் பெருமைப்பட்டுக்கொண்டார்.

கோகிலமும், கண்ணனோடு தனிக்குடித்தனம் வந்த ஓரிரு மதங்கள் வரை தன் தோழிகளிடமும் மற்றவர்களிடமும் எங்கள் வீட்டுக்காரருக்கு ஆபீசிலே வேலையாக்கும் என்று ஓயாது சொல்லிக்கொண்டிருந்தாள்.

ஆனால், கண்ணனைப்போலவே வேறோர் அலுவலகத்தில் பணியாற்றும் கணபதியையும், அவன் மனைவி கமலாவையும் கண்டு, அவர்களோடு பழகியதில் இருந்து அவளுக்கு இருந்த உற்சாகமெல்லாம், இடம் தெரியாமல் மறைந்துவிட்டது.

கண்ணனைப்போலவே—ஏன் கண்ணனைவிட குறைவாகவே ஊதியம் பெறும், கணபதிக்குமட்டும் கையில் கடிகாரமும், மோதிரங்களும் வந்த தெப்படி? அதுதான் போகட்டும். கமலா தன் கழுத்தில் அணிந்திருக்கிறாளே காசுமாலை, அது எப்படி கிடைத்தது?

தனக்குத் தோன்றிய இந்த ஐயங்களை, ஒருநாள் கமலாவிடம் கேட்டேவிட்டாள் கோகிலம். ஆனால் "எல்லாவற்றிற்கும் மூளை வேண்டும்" என்று அவள் சொல்லிய பதிலைத்தான், அவளால் புரிந்துகொள்ள முடியவில்லை.

மூளை வேண்டுமென்றால் தனக்கும், தன் கணவனுக்கும் மூளையில்லையா? தங்களுக்குத்தான் இல்லையென்றால், குறைந்த சம்பளம்வாங்கி வாழ்க்கை நடத்தும் கோவிந்தன், கிருஷ்ணன் இவர்களுக்குக்கூட இல்லையா? என்று தன் மூளையைப் போட்டுக் குழப்பிக்கொண்டதில் தலைவலிதான் வந்ததே தவிர, சரியான விடை கிடைக்கவில்லை.

இந்த மாதம் எப்படியும் ஒரு நல்ல சேலை எடுத்துவிடவேண்டும் உயர்ந்த ரவிக்கைகளேனும் இரண்டு எடுத்துவிட வேண்டும் என்று மாதாமாதம் எண்ணுவாள். ஆனால் ஒரு மாதம்கூட கண்ணன் சம்பளத்தில் உபரித்தொகை ஒரு ரூபாய்க்குமேல் மிஞ்சாது. தங்கள் இருவருக்கும் இந்த நிலையென்றால், அவர்களுக்கும் இந்நிலைதானே ஏற்படவேண்டும்? என்று எண்ணிக்கொண்டிருந்தபோது, "அதுதான் இல்லை" என்ற குரல் கேட்டுத் திரும்பினாள் கோகிலம். கமலம் கையில் டம்பப் பையோடு, உதட்டிற்குச் சாயம் பூசி, முகத்திற்குப் பவுடர் இட்டு, பட்டுப்புடவைகட்டி காசுமாலை அணிந்து சினிமா நடிகைபோல் சிரித்தபடி நின்றுகொண்டிருந்தாள்.

"அடடே.........நான் நினைத்தது உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று வியப்புடன் கேட்டாள் கோகிலம்.

"ஏன் தெரியாது? இன்று முப்பதாம் தேதியல்லவா? நானே வாங்குகிற சம்பளத்துக்கு இன்றிலிருந்தே பட்ஜெட் போட்டால்தானே முடியும்?" என்று கமலா தன் கழுத்தைத் தடவிவிட்டுக் கொண்டபோது, அவள் அணிந்திருந்த புதிய காசுமாலையொன்றின் ஒளி கோகிலத்தின் கண்களைப் பறித்தது. 'இது என்ன புதுசுபோல இருக்கே?' என்றாள் கோகிலம்.

'ஆமாம்......இன்றுதான் வாங்கினேம்...ஐந்து பவுன் 680 ரூபாய். நல்லா இல்லையா?" என்றவாறு காசுமாலையைக் கழற்றி அவள் கரங்களில் திணித்தாள் கமலம்.

அந்த மாலையை வாங்கி மூன்று நான்கு தடவை உற்று நோக்கிய கோகில "இது" என்று இழுந்தாள் "பதினெட்டுக் காரட்டல்ல...... இருபத்திரெண்டு காரட்"...—என்றபடி கலுக்கெனச் சிரித்தாள் கமலம்.

"இன்று தேதி முப்பதல்லவா?"

"ஆமாம்"

"எங்களிடம் முப்பது காசுகூட இல்லை...நீங்கள் என்னவென்றால் 680 ரூபாய்க்குக் காசுமாலை வாங்கியிருக்கிறீர்களே?"

"680க்கு என்ன? 1000 ரூபாய்க்குக்கூட வாங்கலாம்.....மூளை இருந்தால்..." என்று பழைய பாணியிலேயே பதிலளித்தாள் கமலம்.

அதற்குள் அலுவலகத்தில் இருந்து திரும்பிய கண்ணனைக் கண்டதும் அவனிடம் அந்த காசுமாலையைக் காட்டியபடி, "இதோ பாருங்க......இந்த மாலையை 680 ரூபாய்க்கு வாங்கினாங்களாம்......... நீங்களும்தான் ஆபீசிலே வேலை பார்க்கிறீங்களே. ஒரே ஒரு பவுனில் சங்கிலி உண்டா? நல்ல சேலை உண்டா? சிறிது விலை கூடிய ரவிக்

★★★★★★★★★★★★★★★★★

மாண்புமிகு அமைச்சர்

மா. முத்துசாமி

அவர்களது

## இரஷ்யப் பயணம்

பற்றிய தொடர் கட்டுரை

நவம்பரிலிருந்து வெளிவருகிறது.

★★★★★★★★★★★★★★★★★

கைதான் உண்டா?'' என்று தன் மனதில் இருந்த குமுறலையெல்லாம் கேள்விகள் வடிவத்தில் கொட்டித் தீர்த்தாள் கோகிலம்.

''கோகிலம்'' என்று பலமாகக் கத்தினான் கண்ணன்.

''கோபம் வந்து என்னங்க பண்றது? உங்களைவிட அவங்கள்ளாம் குறைவாகத்தானே சம்பளம் வாங்குறாங்க. இருந்தாலும் அவங்கள்ளாம் நல்ல வசதியா, மாங்காய்மாலை காசு மாலையெல்லாம் போட்டுட்டு இருக்காங்களே எப்படி?''

''உனக்கு காசுமாலைதானே வேணும்?''

''ஆமாம்.........ஒரு காசுமாலை இதைப்போல வாங்கிக்கொடுத்துடுங்க; அதுபோதும்'' குழந்தையைப் போல குழைந்தாள் கோகிலம்.

''சரி நானே எப்படியோ வாங்கித் தருகிறேன்போ.'' முடிவாகக் கூறினான் கண்ணன்.

கமலத்துக்கு அப்பொழுதுதான் மனம் நிம்மதியாக இருந்தது. எப்படியும் நானே வாங்கித் தருவதாகக் கூறிவிட்டானல்லவா? மகிழ்ச்சி வெள்ளம் அவள் உடலெல்லாம் பொங்கிப் புரண்டது.

கமலம் ''நான் வருகிறேன்'' என்று கூறி விடைபெற்றுச் சென்று விட்டாள்.

எப்படியோ வாங்கித் தருகிறேன் என்றாரே, எப்படி வாங்கித்தருவார்? இவருக்கு வருகின்ற சம்பளமே நூறு ரூபாய்...அது குடும்பம் நடத்தவே போதுவதில்லை......அப்படி இருக்க நானைக்கு எப்படித் தருவார்? என்று சிந்திக்கத் தொடங்கிய கோகிலம், எப்படியோ வாங்கித்தரட்டும் என்ற முடிவிற்கு வந்தவளாய் வெளியே வந்தாள்.

அவள் மனம் நிலை கொள்ளாமல் தவித்தது. நானே கழுத்தில் காசு மாலை அணிந்தால்தான் மனம் நிம்மதியடையும்போல் தோன்றியது. கமலம் அந்தக் காசுமாலையை எங்கே வாங்கியிருப்பாள்? கேட்டு வருவோமேஎன்றுஎண்ணியவளாய் வெளியே வந்தாள் கோகிலம், கமலத்தின் வீட்டையடைந்தாள்.

அவள் மனம் பகீர் என்றது. ஏனெனில் கமலத்தின் வீட்டின் முன் ஒரு போலீஸ் லாரி நின்று கொண்டிருந்தது. வீட்டிற்குள் இருந்து நான்கைந்து போலீஸ்காரர்கள் ஏராளமான மதுப்புட்டிகளைக் கைப்பற்றிக்கொண்டிருந்தனர். ஒரு போலீஸ்காரர் கணபதியின் கரங்களில் விலங்கை மாட்டி வெளியே கொண்டுவந்தார். கமலம் போலீஸ் லாரிக்குள் ஏற்றப்பட்டிருந்தாள்.

கோகிலத்திற்கு ஒருகண நேரத்தில் எல்லாமே விளங்கின. கமலத்திற்கு காசுமாலை வந்தவிதமும் கணபதியின் கரங்களில் போலீஸ் விலங்கேறிய விதமும் அவளுக்குத் தெளிவாகத் தெரிந்தன.


கோகிலம் வேகமாக தன்வீட்டையடைந்து தடாலென்று கண்ணனின் கால்களில் விழுந்தாள். கண்ணனுக்கு ஒன்றுமே புரியவில்லை'' ''என்ன? என்ன?'' என்றவாறு கோகிலத்தைத் தூக்கிநிறுத்தினான்.

'எனக்கு காசுமாலையும் வேண்டாம் ஒன்றும் வேண்டாம். நீங்க வாங்கற சம்பளமே போதுங்க''...... என்று இரைக்க இரைக்கக் கூறினாள் கோகிலம்.

''ஏன்? ஏன்?'' என்று விவரம் புரியாது வினவினான் கண்ணன், ''அதோ...அதோ'' என்று கோகிலம் சுட்டிக்காட்டிய திசையை நோக்கினான் கண்ணன்.

கணபதியின் வீட்டின்முன் நின்று கொண்டிருந்த போலீஸ் லாரி, கைப்பற்றிய மதுப்புட்டிகளை உள்ளடக்கி கணபதியையும் கமலாவையும் ஏற்றிக்கொண்டு போலீஸ் ஸ்டேஷனை நோக்கி விரைந்து கொண்டிருந்தது.

''தூரத்துப் பச்சை கண்களுக்கு அழகாய்த்தான் இருக்கும்..... அதற்காகத்தான் போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்துன்னு பெரியவங்க சொல்லுங்க'' என்று கோகிலத்தை நோக்கி, அமைதியாகப் பதிலளித்தான் கண்ணன்! ●



6-ம் பக்கத் தொடர்ச்சி

கூறுவது? எந்த சாட்சியைக்காட்டுவது?

அவன் இப்போது வராமலே இருந்திருந்தாலாவது 'தூய மனைவி' என்ற எண்ணத்திலேயே வாழ்ந்திருப்பான். பாவம், அவன் பேசவில்லை—பேச விரும்பவில்லை—பேச முடியவில்லை!

கால்கள் வந்த வேகத்தோடு வந்த வழியே திரும்பின......

'போகாதீர்கள்! இந்த வீட்டை விட்டுப் போகவேண்டியவள் நான்.''

தன் ஒரே மகனைத் திரும்பி ஒரு முறை பார்த்துவிட்டு, தன் எதிரே நின்ற அவன் கால்களைத் தொட்டு வணங்குவதற்காகக் குனிந்த கைகள் தொடாமலேயே மீண்டன. கண்களில் தேங்கி நின்ற கண்ணீர் அவன் கால்களில் விழுந்து சிதறின.

அவள் தெருவுக்கு வந்துவிட்டாள். அவளை அழைப்பதற்காக அவன் கைகள் நீண்டன. ஆனால் அவன் வாயிலிருந்து எந்த ஓசையும் எழும்பவில்லை.

எதையும் அவள் கவனித்ததாகத் தெரியவில்லை அந்தப் பின்னிருட்டு நேரத்தில் அந்தப் பெட்டிக்கடை சுந்தரம் போன வழியே அந்தப் பேதையின் கால்கள் போய்க் கொண்டிருந்தன.

பொழுதுவிடிந்துகொண்டிருந்தது ஆனால் அவள் வாழ்வு......?

★

பெண்களைப் பெருமிதம் கொள்ளச் செய்வது, அழகு; அவர்களை மிகவும் பாராட்டும்படிச் செய்வது, பண்பு; அவர்களைத் தெய்விகமாகத் தோன்றச்செய்வது, அடக்கம்.

—ஷேக்ஸ்பியர்

# அண்ணன் மேல் ஆணை!

நண்பா,

"பிளவு ஏற்பட்டுவிட்டது-இடையிலே நுழைந்து கைவரிசையைக் காட்டலாம்" என்று சத்திய மூர்த்தி பவனம் கெக்கலிப்பு கொட்டுகிறதாம். ஒரு சில நண்பர்கள் ஆத்திரமிகுதியால் செயல்படுவதைத் தனக்குச் சாதகமாக எடுத்துக்கொண்டு, இந்த முறை "காங்கிரஸ் மேயர்தான் வருவார்" என்று கூட்டங்களில் பேசுகிருர்களாம்.

காங்கிரஸ் மேயர் வந்ததும் முதல் வேலையாக என்ன செய்யப் போகிருர்களாம் தெரியுமா?

பேசியிருக்கிருர்கள் நண்பா!

ரகசியமாக அல்ல!

கூட்டத்திலே கர்ச்சித்திருக்கிருர்கள்.

மேயர் அறையில் இருக்கும் அண்ணு படம் தூக்கி எறியப்படும்.

முதல் தீர்மானம், நெடுஞ்சாலைத் துறை அனுமதித்திருந்தாலும், போக்குவரத்துக்கு மௌண்ட் ரோடில் இடையூருக இருக்கிறதுஎன்பதால் அண்ணு சிலையை அகற்ற வேண்டும்.

(தஞ்சை நகராட்சியில் இப்போது நிறைவேற்றினுர்கள் அல்லவா, அதுபோல)

இந்த இரண்டு காரியங்களுக்காகத்தான் காங்கிரஸ் மேயர் வரவேண்டுமாம். ஆகஸ்டு ஊர்வலம் நடத்தி அண்ணு சிலையைச் சுற்றிக் கருப்புத் துணிகளை வீசியெறிந்து துக்கம் கொண்டாடியவர்கள் அல்லவா! அவர்கள் நோக்கமெல்லாம் அண்ணு படத்தை அகற்றுவதும் சிலையை நகர்த்துவதும் தான்! இடையில் மேத்தா என்று காங்கிரஸ்காரர் மேயராக வந்தபோது, அண்ணு படத்தை வெளியே எடுத்து வீசினுர்கள் அல்லவா? அந்த ஆசையில் இப்போதும் பேசுகிருர்கள்—எழுதுகிருர்கள்.

நண்பா! ஒரு உதாரணம் கேள்!

தேவதாஸ் என்ற காங்கிரஸ்காரர் இறந்துவிட்டார். தடியடியால் என்றனர் காங்கிரசார்! தடியடிபட்ட 45 நாட்கள் கழித்து வேறு வியாதியால் இறந்ததாகப் போலீஸ் அதிகாரி அறிக்கைவிட்டார். எப்படியிருப்பினும் தேவதாஸ் மறைவு, நம்மை மகிழச் செய்வது அல்ல! ஆனுல் நண்பா, தேவதாசுக்கு அனுதாபம் என்று கூறி—அண்ணு பிறந்த நாள் செப்டம்பர் 15-ஆம் தேதியன்று நாடெங்கும் காங்கிரஸ் கொடிகளை அரைக் கம்பத்தில் பறக்கவிட்டனர். தியாகி சங்கரலிங்கத்துக்காக இறங்காதகொடி தேவதாசுக்காக இறங்கியது: பரவாயில்லை!

அதற்கு வேறுநாள் பார்க்கக்கூடாதா? அண்ணு அறுவைச் சிகிச்சைக்காக அமெரிக்க மருத்துவ மனையில் படுத்திருக்கும்போது, அவர் பிறந்த நாளில் தானு, காங்கிரஸ் கொடிகள் அரைக்கம்பத்தில் பறக்க விடப்பட வேண்டும்?

(திரு. சுப்பிரமணியம் இந்த செய்தி கேட்டு வெளிநாட்டிலிருந்தவாறு துடித்திருக்கக்கூடும் என நம்புகிறேன்?)

அதுமட்டுமா? சென்னையில் 22ந்தேதி அண்ணு பிறந்த நாள் ஊர்வலம், கூட்டம்; அன்று தேவதாசுக்கு அனுதாபக் கூட்டம் காமராசர் பேசுகிருர்.

அண்ணு, அமெரிக்காவில் இருக்கும்போது பிறந்த நாள் விழா ஏன் கொண்டாட வேண்டும் என்று ஏடுகளில் கிண்டல் செய்து எழுதினுர்கள்.

பண்டித நேரு மறைந்த இருபதாம்நாள் மூன்று லட்ச ரூபாய் செலவில் சென்னையில் காமராசர் பிறந்த நாள் கொண்டாடியவர்கள்தான் அப்படி எழுதினுர்கள். அது மட்டுமல்ல நண்பா—

"தேவதாசுவின் உயிரைவிட எந்த வகையில் அண்ணுத்துரையின் உயிர் உயர்வானதோ நாமறியோம்!"

என்று, சினிமாக் கவிஞர் ஒருவர் அவரது நாளேட்டில் 27-9-68 அன்று முதல் பக்கத்தில் கொட்டை எழுத்தில் அச்சுக் கோத்திருந்தார்.

இத்தகைய வன்கணுளர்கள், நம்மிடையே பிளவு ஏற்படாதா; நமக்கு ரத்தம் கிடைக்காதா என்று நாக்கை நீட்டிக்கொண்டிருப்பதில் வியப்பு இல்லையல்லவா?

பிளவை ஏற்படுத்தக் காங்கிரசார் பெரும்பாடு படுகிருர்கள்.

இவரால் இவருக்கு இடம் கிடைத்தது! அவரால் அவருக்கு இடம் கிடைக்காமல் போய்விட்டது! என்றெல்லாம் சிண்டுமுடியப் பார்க்கிருர்கள். ஆய்வுக் குழு பரிசீலித்து, நாடாளு மன்ற – சட்ட மன்ற உறுப்பினர்களின் யோசனை கேட்கப்பட்டு, இறுதியாகத் தலைமைக் கழகத்தினரும், ஆட்சி மன்றக்குழு உறுப்பினர்களும், மாநகராட்சி தி. மு. க, தலைவரும், சென்னை மாவட்டச் செயலாளரும் கூடிக் கலந்து கூட்டாக விடுத்த வேட்பாளர் பட்டியல் அறிவிப்பில் ஒருவரை யொருவர் குற்றம் சாட்டி, கோள் மூட்டிவிட்டு, ஒரு சிலரையாவது தங்கள் வழிக்கு இழுக்க முடியுமா என்று காங்கிரஸ்காரர்கள் வலை வீசுவதும், அந்த வலையில் விழுந்தவர்கள், தங்கள் மதிப்புமிக்க தலைவர்களைப்பற்றி துண்டு அறிக்கை வெளியிடுவதும்—காங்கிரசின் கலக முயற்சிக்கு வெற்றியைப் போலத் தோற்றமளித்தாலும் – கடைசியில் அவர்கள் ஏமாற்றத்தையே அணைத்துக் கொள்ளப் போகிருர்கள் என்பது மட்டும் திண்ணம்!

காங்கிரசாருக்கு நம்மிடமிருந்து அங்கொன்றும் இங்கொன்றுமாக இரண்டொரு 'தீனி' கிடைக்கலாம். ஆனுல் அது 'பத்து நாள் பரபரப்பு'க்கே பயன்படுமே தவிர, வேறில்லை.

எதையும் மன்னித்துவிட அண்ணன் இருக்கிருர் என்ற துணிவில், சிலர் துரோகியாகக்கூட முனையலாம்.

ஆனுல் இனி அதுதான் நடவாது! என் ஆருயிர் நண்பனுகிய நீயே கழகத்திற்குத் துரோகம் செய்து

உனக்கு மன்னிப்புக் கிடைத்து விடுமேயானால், அதன் பிறகு நீ இருக்கிற இடத்தில் நான் இருப்பதாக இல்லை! இதை என் அண்ணனின் மீது ஆணையாகக் கூறுகிறேன்!

இந்த உறுதியான நிலையில் உன்னைப் போல் பலரும் இருக்கிற காரணத்தால் உடனடியாகத் தவறான போக்கிலிருந்து தங்களை விடுவித்துக்கொண்டு திருத்திக்கொள்கிறவர்களைத் தவிர, மற்றவர்களுக்குக் காலா காலத்திற்கும் 'மன்னிப்பு' என்பது முயற்கொம்பேயாகும்!

கழகத்திற்குத் துரோகம் செய்ய எண்ணுவதைவிட, கழகத் தலைவர்கள் தூங்கும்போது அவர்கள் தலையில் கல்லைத் தூக்கிப் போட்டுக் கொன்று விடலாமே! என்று மக்கள் ஏக்கக் குரல் எழுப்புவது உன் காதில் விழுகிறதா நண்பா! மக்களின் சக்தியை – நம்மை மதியாதவர்கள் பலமுறை பாடமாகப் பெற்றிருக்கிறார்கள். இம்முறையும் அந்தப் பாடம் அவர்களுக்குக் காத்திருக்கிறது!

பத்துப் பேர் ஒரு இடத்தைக் கேட்டால், ஒருவர் பெறுவதும் ஒன்பது பேர் பெறமுடியாமற் போவதும் இயற்கைதானே!

இதைச் சிந்திப்பவர்கள் சீற்றம் தவிர்ப்பர். சீற்றம் கொண்டிருப்பவர்களும் யாரோ எவரோ அல்ல! கழகத்தைத் தங்கள் கண்ணீராலும் செந்நீராலும் வளர்த்தவர்கள். அவர்கள் எலும்பைக் கம்பமாக்கிக் கொடியேற்றியுள்ளனர். நரம்புகளைக் கயிறுக்கித் தோரணங் கட்டியுள்ளனர்.

அவர்களில் சிலரது சீற்றத்தை என்னால் உணர முடிகிறது!

அந்தக் கோபம், தாயிடம் குழந்தை கொள்ளும் கோபமாகத்தான் தலைவர்களுக்குத் தோன்றுகிறது!

பத்து நாள் கோபத்தைத் தாங்கிக்கொள்ளலாம்-

ஆனால் பத்து நிமிட துரோகத்தைத் தாங்கிக் கொள்ள முடியுமா?

முடியாது; நண்பா, முடியாது!

மீண்டும் கூறுகிறேன்;

"என் ஆருயிர் நண்பனாகிய நீயே கழகத்திற்குத் துரோகம் செய்து; உனக்கு மன்னிப்புக் கிடைத்துவிடுமேயானால், அதன் பிறகு நீ இருக்கிற இடத்தில் நான் இருப்பதாக இல்லை. இதை என் அண்ணன் மீதும் அன்னையின் மீதும் ஆணையாகக் கூறுகிறேன்."

—முரசொலி (மறவன்மடல்.)

# பாழ்செய்யும் உட்பகை!

காங்கிரஸ் ஏன் கெட்டது? லோகமான்ய பாலகங்காதர திலகரும் லாலா லஜபதிராயும் சிதம்பரனாரும் குமரனும் பாரதியும் வளர்த்த காங்கிரஸ் ஏன் கெட்டது காந்தியாரும் நேருவும் வளர்த்த காங்கிரஸ் இத்தனை சீக்கிரம் கெட்டது ஏன்? பல் குழுவும் பாழ் செய்யும் உட்பகையும் இருந்ததால்தான்.

வாழ்ந்த காங்கிரஸ் வீழ்ந்தது நமக்கெல்லாம் ஒரு எச்சரிக்கை! ஒரு பாடம்!

இதற்கு ஒரு புதிய புத்தகம் தேவையில்லை. ஏற்கனவே எழுதப்பட்டு நம் முன் உள்ளது.

காமராசரும் சுப்பிரமணியமும் வேறுபட்டால் என்ன நடக்கும் என்பது நாம்அறிந்தது. ராஜாஜியும்காமராசரும் வேறுபட்டால் என்ன ஆகும் என்பதைக் கடந்த பத்தாண்டுக்கால வரலாறுகாட்டுகிறது.

அங்கே படிந்த பாசி இங்கே படிய வேண்டாம். அங்கே விழுந்த கறை இங்கே விழக்கூடாது. நாமத்தனை பேரும் கழகம் என்ற உணர்வு வேண்டும்!

சிலவட்டங்களில்சிலரிடையேஒரு எண்ணம் உருவாகியுள்ளது. "நமக்குத்தான் கிடைக்கவில்லையே, காங்கிரசாவது வெற்றி பெறட்டும். கோடரிக்காம்பாக ஆனாலும் ஆவேன். கழகவேட்பாளர் வெற்றி பெறவிட மாட்டேன்!" என்று சிலர் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

இன்னும் இரண்டு நாட்கள் இருக்கின்றன, நான் ஏற்கனவே எச்சரித்



திருக்கிறேன். திருந்திக் கொள்வார்கள் என்று நம்புகிறேன். திருந்தா திருந்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டே தீரும்.

நடவடிக்கை என்பது களை எடுத்தலே அல்லாமல், பயிரைப் பாழ்படுத்துவது அல்ல. தக்க நேரத்தில் களை எடுத்தெறியப்படுவதுநல்லதே. கூடவே இருந்து அடுத்துக் கெடுப்பவரைவிட, எதிரியாக இருந்தாலும் பரவாயில்லை.

ஏனெனில் அத்தகையவர் நடவடிக்கைகள் என்ன என்பது தெரியும்.

கட்சியிலிருந்து பொறுப்புகளைப் பெற்று செல்வாக்கில் இருந்தவர்கள் வெளியே போனாலும் இதே செல்வாக்குடன் விளங்கலாமென்று எண்ணுவது வரலாறு தெரியாததால் வந்த நிலை ஆகும்.

இதைவிட்டுத் தனி இடம் போகிறவர்களுக்கு அதே மதிப்புக் கிடைக்காது. இங்கே இருந்திருந்தால் சிலர் அமைச்சர்களாகக்கூட அகியிருப்பார்கள். எங்கே? அவர்கவது விலாசம் என்ன?

இதையெல்லாம் உணர்ந்து மாறுபாடாக உள்ளவர்கள் திருத்திக் கொள்வார்கள் என்று நம்புகிறேன். இல்லையேல் சீந்துவாரற்று, இருக்கிற இடம் தெரியாது. சிரித்த முகம் காண முடியாது போவார்கள். அவர்களும் அவரைச் சார்ந்தவர்களும் கடுமையான நடவடிக்கைக்கு ஆளாவார்கள்.

அண்ணாவாகிலும் இரக்கம் உடையவராக இருப்பார்—எனக்கு அத்தகைய இரக்கம் இல்லை.

# “சிறுகதைச் செல்வர் செக்காவ்”

“செக்காவின் நாடகங்களைப் பார்க்கும் பொழுது எனது நாடகங்களையெல்லாம் அடுப்பில் போட்டுவிடலாமா என்று தோன்றுகிறது” என்று நாடகமேதை பெர்னுட்ஷா செக்காவின் நாடகங்களைப் பாராட்டிக் கூறியுள்ளார். ஷா எவரையும் எளிதில் புகழ்ந்துவிடமாட்டார். புகழ் பெற்ற பலரை தமது நையாண்டிப் பேச்சால் தாக்கி யெறிந்தவர். அப்படிப்பட்டவரே, செக்காவின் நாடகப் புலமையைப் பாராட்டியிருக்கிறார் என்றால்......செக்காவின் திறமை எப்படிப்பட்டதாக யிருக்கும்? சிறந்த நாடகாசிரியராக மட்டுமில்லை; சிறந்த சிறுகதை மன்னராகவும், சோவியத் ருஷ்யாவின் இலக்கியவானில், ஒரு விடிவெள்ளியாக வும்விளங்கினுர் ஆண்டன் பாவ்லோவிச் செக்காவ்

ருஷ்யாவின் தென் பகுதியிலுள்ள ‘டாகன்ரக்’ என்ற நகரத்தில் சிறுகடை ஒன்றை வைத்துக்கொண்டு வாழ்நாளைக்கழித்துக்கொண்டிருந்த ஒருவரது குடும்பத்தில், 1860-ஆம் ஆண்டு செக்காவ் பிறந்தார். சிறு வயதிலேயே படிப்பின் மீது இவருக்கிருந்த ஆவலைக் கண்டு பெற்றோர் இவரைப் படிக்கவைத்தனர். எத்தனையோ இடையூறுகளுக்குப் பின் மாஸ்கோ பல்கலைக் கழகத்தில் 1884-ஆம் ஆண்டு டாக்டர் பட்டம் பெற்றார். டாக்டர் படிப்பிற்குப் போதுமான பணம் தேவைப்படவே, பத்திரிகைகளுக்கு கேலிச் சித்திரங்களையும், கதைகளையும் எழுதி அனுப்பி ஓரளவிற்குப் பணம் சம்பாதித்துக் கல்வி கற்றார். இதிலிருந்துதான் இவரது இலக்கியப் பணி தொடங்கியது. டாக்டர் பட்டம் பெற்ற பின்பும் மருத்துவப் பணிபுரியாமல், இலக்கியப் பணியிலேயே ஆழ்ந்திருந்தார். மனிதர்களின் நோய்களைப் போக்கவேண்டிய டாக்டர் செக்காவ் ருஷ்ய இலக்கியத்தில் ஏற்பட்டிருந்த நோயைப் போக்கவே தன் வாழ்நாளையெல்லாம் செலவிட்டார். 1886-ல் செக்காவின் முதல் சிறுகதைத் தொகுப்பு நூல் வெளிவந்தது. இதன் மூலம் மக்கள் மனதில் இடம் பெற்றுவிட்டார் செக்காவ். 1892—93 ஆம், ஆண்டுகளில் நிஸ்னி நோவ கிராடில் காலரா நோய் பலமாகப் பரவவே, செக்காவ் உடனே அங்குச் சென்று இலவசமாக மருத்துவத் தொண்டாற்றத் தொடங்கினுர். அப்போது செக்காவ் பணப் பற்றுக்குறையினுல் வாடினுர். டாக்டர் பட்டம் பெற்றும் மருத்துவத் துறையில் அவர் சம்பாதித்ததேயில்லை. எழுதினுல்தான் பணம்; எழுதுவதற்கோ நேரமில்லை, முழுநேரமும் நோயாளிகளைக் கவனிக்கவே சரியாக இருந்தது; இந்நிலையில் செக்காவின் தொண்டைப் பாராட்டி அரசாங்கத்தினர் வெகுமதி அளிக்க முன்வந்தார்கள். ஆனுல், அவர் அதைப்பெற மறுத்துவிட்டார். கைதிகளின் நிலைமைகளை நேரில் கண்டறிய சைபீரியா வரை சென்று வந்த பிரயாணத்தாலும், கடும் உழைப்பாலும் 1897ல் செக்காவை க்ஷயரோக நோய் பற்றியது. நோய் குணமாக மலைப் பிரதேசங்களில் வாழ்ந்தார். 1901-ஆம் ஆண்டில் ஓல்காநிப்பர் என்ற நடிகையைத் திருமணம் செய்துகொண்டார். திருமணமான மூன்று ஆண்டுகளுக்குள் செக்காவ், கடுமையான க்ஷயரோகத்திற்கு ஆளானுர். 1904-ஆம் ஆண்டு ஜூலை மாதம் இரண்டாம் நாள், இலக்கிய உலகிற்கு அரிய பல சிறுகதைகளையும், நாடகங்களையும் படைத்துக் கொடுத்த இலக்கிய மேதை செக்காவ் இயற்கை எய்தினுர்.

பிரெஞ்சு சிறுகதை இலக்கியத்திற்கு மாப்பசான் எவ்வளவு பெருமையைத் தேடித் தந்தாரோ ...அதேபோல் செக்காவும், சோவியத் சிறுகதை இலக்கியத்திற்குத் தனிச் சிறப்பைப் பெற்றுத் தந்தார். இலக்கியத் துறையில் புதுப்புது உத்திகளைக் கையாண்டு வெற்றிபெற்று தனக்குப் பின் ஒரு புதிய பரம்பரையையே உண்டாக்கிவிட்டார். செக்காவின் பாணியில் பலர் எழுதத் துவங்கினுர்கள். அவர்களில், கார்க்கி, குப்ரீன், புனின் போன்ற முக்கியமானச் சிலராவார்கள்.

ஒரு சிறுகதைக்கு முழுருபம் கொடுத்து எழுதுவதை செக்காவ் வெறுத்தார். எதற்கும் ஆரம்பம் முடிவு இல்லை என்பது அவரது கருத்தாகும். எனவேதான் அவர், சிறுகதை எழுதத் துவங்கிய தம் நண்பர் ஒருவருக்கு, “ஒரு சிறுகதை எழுதி முடித்ததும் அதன் ஆரம்பம் முடிவு இரண்டையும் அழித்துவிடு. அதுதான் சிறுகதையின் இலக்கணமாகும் என்று அறிவுரை புகன்றுர்.

செக்காவின் நாடகங்களில் அன்றுடம் நாம் காணும் பலதரப்பட்ட மனிதர்களைக் காணலாம் உணர்ச்சியும், உயிர்த் துடிப்பும் மிக்கப் பாத்திரங்களை செக்காவ்உருவாக்கினுர். மனிதமனத்தின் நிறைவேருத ஆசைகள், ஏக்கம், உள்ளக்குமுறல்கள், உணர்ச்சிக் குமிழிகள் ஆகியவைகளை இவரது எழுத்தில் காணலாம். செக்காவின் நாடகங்களைக் காண்போர் தம்மை மறந்து நாடகப் பாத்திரங்களோடு ஒன்றிவிடுவார்கள். பாத்திரங்கள் அழும்போது இவர்களும் அழுவார்கள்; அவர்கள் சிரிக்கும்போது இவர்களும் சிரிப்பார்கள். நாடகம் முடிந்த பிறகும்கூட வீடு செல்லவேண்டும் என்ற நினைவே இல்லாமல் பிரமையுடன் உட்கார்ந்திருப்பார்கள். அறிவிப்பாளர், நாடகம் முடிந்துவிட்டது என்று கூறிய பிறகுதான் பிரமை நீங்கியவர்களாக எழுந்து நாடக அரங்கைவிட்டுச் செல்வார்களாம்!

1896—ஆம் ஆண்டில் செக்காவின் முதல் நாடகமான “கடல்பறவை” நடத்தப்பட்டபோது நடிகர்களின் திறமையின்மையினுல் படுதோல்வி அடைந்தது. மீண்டும் இதே நாடகம், பயிற்சிப் பெற்றத் தகுந்த நடிகர்களைக் கொண்டு போதிய கவனத்துடன் 1898—ல் நடத்தப்பட்டது. இம்முறை நாடகம் மாபெரும் வெற்றியை அடைந்தது இந்த வெற்றி செக்காவுக்கு மிகுந்த ஊக்கத்தைக் கொடுத்தது. நாடகங்கள் எழுதத் துவங்கினுர். ‘அங்கின் வான்யா’ ‘மூன்று சகோதரிகள்’ ‘செர்ரி ஆர்ச்சர்டு’ போன்ற செக்காவின் நாடகங்கள் ருஷ்ய இலக்கிய மாளிகையின் கோபுரங்களில். வைரக் கற்களாக பதிந்து நின்று என்றும் மங்காத ஒளியை வீசிக்கொண்டிருக்கிறது.

—திருப்பத்தூர் கீ. வீரமணி

★

# பக்தவத்சல வரலாறு!

—முத்து—

அது 1908ம் ஆண்டு. மனித குலம் தோன்றிய வரலாறு பற்றி விரிவாக ஆராய்ச்சிகள் நடந்து கொண்டிருந்த நேரம் அது. உலகத்தின் எந்த மூலையில் ஏதாவது ஒரு பழங்காலத்துப் பிராணியின் எலும்புக் கூட்டையோ மண்டையோட்டையோ கண்டு பிடித்துவிட்டால், ஆராய்ச்சியாளர் கூட்டம் அந்த இடத்தை நோக்கிப் படையெடுக்கும்.

அப்படி இருந்தபோது இங்கிலாந்து நாட்டிலே இருந்து ஒரு செய்தி வந்தது.

இங்கிலாந்து நாட்டில் லீவெஸ் நகருக்கு அருகே பில்ட் டௌன் என்ற பகுதியில் புதை குழி ஒன்றில் பழங்காலத்துப் பிராணிகளின் எலும்புச் சிதிலங்கள் இருப்பதாகவும், அவற்றை சார்லஸ் டாசன் என்ற ஒரு வழக்கறிஞர் கண்டு பிடித்திருப்பதாகவும் செய்தி வந்தது.

உலகத்தில் உள்ள மனித குல ஆராய்ச்சியாளர் பலரும் பில்ட் டௌனில் குழுமினர், யானையின் தந்தங்கள், நீர்நாய், நீர்யானைகளின் எலும்புக்கூடுகளின் பகுதிகள், அவற்றுடன் ஒரு மனிதனைப் போன்ற அமைப்புள்ள பிராணி ஒன்றின் மண்டையோடு ஆகியவை அங்கே இருந்தன.

அந்த மண்டையோடு கிட்டத்தட்ட சிம்பன்சிக்கும் மனிதனுக்கும் இடைப்பட்ட நிலையில் மனிதனுடைய மண்டையோடாக இருக்கலாம் என்றும், தாடைகள், கடைவாய்ப் பற்கள் ஆகியவை சிம்பன்சி குரங்கின் தாடை — பற்களைப் போலவே இருப்பதால் இன்றைய மனிதனின் வளர்ச்சிப் படிவத்தை அறிய அது உதவுகிறது என்றும் முடிவு செய்தார்கள். மண்டையோட்டின் மூளைக் குழி இன்றைய மனிதனுடையது போன்றே இருந்ததாம்.

மனித இனத் தோற்றம் பற்றிய வரலாற்றின் இருண்டு கிடந்த பகுதியில் இந்தக் கண்டுபிடிப்பு பேரொளி வீசியதாக அறிஞர்கள் கூறினார்கள். அந்தக் கண்டுபிடிப்புக்குக் காரணமான சார்லஸ் டாசனைப் புகழாதவர்கள் இல்லை! அந்த மனித ஓட்டுக்கு உரியவனை பில்ட் டௌன் மனிதனை—அந்த மண்டை ஓட்டு அமைப்புடையவனை—ஈயான்த் ரோபஸ் டாசானி என்று கண்டு பிடித்தவர் பெயராலேயே உலகத்துக்கு அறிமுகப் படுத்தினார்கள்.

மனித இனத் தோற்றத்தில் கடைசிப் படிவத்தில் நின்று, இன்றைய மனிதனின் முதல் மாற்றம் நிகழ்ந்தது ஐரோப்பிய இனத்தில்தான்—அதுவும், இங்கிலாந்திலே தான்—என்று உலகத்தை நம்பவைத்தது அந்தக் கண்டு பிடிப்பு!

45 ஆண்டுகள் கழிந்தன!

இப்படி எங்கோ புதைந்து கிடந்து பின்னாளில் தோண்டுகையில் எதிர்பாராமல் கிடைக்கின்ற எலும்புக் கூடுகளின் வயதைத் துல்லியமாகக் கணிக்கும் முறைகள் வளர்ந்தன.

விளைவு......?

சார்லஸ் டாசனின் பில்ட்டௌன் மனிதன் தலைகுப்புற வீழ்ந்தான்.

எலும்புக் கூட்டில் உள்ள 'புளோரின்' என்ற மூலகப் பொருள் பற்றி நடந்த ஆராய்ச்சியில், அது, மிகப் பழங்காலத்துப் பிராணியின் ஓடு அல்ல என்றும், சமீபகாலத்ததே என்றும் தெளிவாகியது.

ஆராய்ச்சியின் போக்கை மாற்றி வரலாற்றைப் புரட்ட நினைத்த யாரோ, புதிய மண்டையோடு ஒன்றைப் பொட்டாசியம் பைகிரோமேட் கலவையில் பொதிந்து உப்புக் குழியினுள் வைத்ததால் அது மிகப் பழைய மண்டையோடு போலத் தோற்றம் அளித்ததாம்.

யானையின் பற்களை மிகச் சாமர்த்தியமாய் — நுணுக்கமாய் அராவி மனிதப் பற்களைப் போன்றே தோற்றமளிக்கும்படி வைத்திருந்தார்களாம்.

இன்றைய சாதாரண கத்தி ஒன்றினால் அராவிய அடையாளங்களை உருப்பெருக்கு ஆடி காட்டிக் கொடுத்தது.

இவ்வளவு துரோகமா? செய்தது யார்? அறிஞர்களின் கண்கள் 45 ஆண்டுகளுக்குப் பின்னால் 1953-ல் ஆளைத் தேடின.

அதற்குள் அந்தத் துரோகி சார்லஸ் டாசன் செத்துப் போய் பல ஆண்டுகள் உருண்டோடிவிட்டன!

* * *

முன்னாள் முதலமைச்சர் மதிப்புக்குரிய பக்தவத்சலம் அவர்கள் விடுதலை இயக்கத்தின் வரலாற்றை எழுதப்போகிறார் என்று வெளியான செய்தியைப் படித்தபோது நினைவுக்கு வந்த ஒரு நிகழ்ச்சியே இது.

விடுதலை இயக்கத்தின் வரலாற்றை எழுதிட மீஞ்சூர் பெரியார் பக்தவத்சலத்தை விடத் தகுதி மிக்கவர் வேறு யாரும் இல்லை.

பெரியாரை எதிர்த்து மூண்ட விடுதலை வேள்வியில் தம்முடைய பல நலன்களைத் தியாகம் செய்த பெரியார் என்று அவரைச் சொல்கிறார்கள்.

நேரடியாகப் பல நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டு விடுதலை உணர்வுக்கு வேரூன்றிய அவரைப் போன்றவர்கள்தான் அந்த இயக்கத்தின் வரலாற்றை—சுவையாக இல்லாவிட்டாலும் — முறையாக எழுத முடியும்!

ஆனால் பக்தவத்சலம் அப்படி எழுதுவாரா? இந்த நிலையில்தான் சார்லஸ் டாசன் நினைவு வருகிறது. அதில் தவறு ஒன்றுமில்லை. திரு. பக்தவத்சலம் அவர்களின் அணிமைக்கால நடவடிக்கைகளை மேற்போக்காகக் கவனிப்போருக்குக்கூட இந்த நினைவு எழுவதில் வியப்பில்லை.

விடுதலைக்குப் பின்னால் பிறந்த இளைஞர்களின் மனத்தில் காங்கிரசுக் கட்சியைப்பற்றி ஒளிமிக்க ஓவியத்தைத் தீட்டவேண்டும் என்பதற்காகவே இந்திய அரசு விடுதலை இயக்க வரலாறு ஒன்றைத் தொகுத்து எழுதிக்கொண்டிருப்பதாகச் செய்தி!

அப்படியிருக்க பக்தவத்சலனார், இப்படி அவசர

## புதிய தொடர்கதை!
## 20-10-'68 முதல்

புதியதொரு கோணத்தில்
புதுமைப் பொலிவோடு

உள்ளத்தின் பொல்லாத்தனத்தை
உணர்ச்சிப் பிழம்பாய்

எஸ். எஸ். தென்னரசு
வடித்துத் தரும்

# ஒரே ரத்தம்!

ஆரம்பமாகிறது!

அவசரமாக வரலாறு எழுத முன்வருவது எதற்காக?

தமிழகத்தைப் பிடித்துள்ள குறையே செழுமை மிக்க பழங்காலத்தில் வளமாக வாழ்ந்தவர்கள் தாங்கள் நேரில் கண்டவற்றை முறையாகத் தொகுத்து நிலையாக வைக்கவில்லையே என்பதுதான்.

அந்தக் குறை இல்லாமல் விடுதலை இயக்கத்தோடேயே வளர்ந்து வாழ்ந்த திரு. பக்தவத்சலம் இப்படி ஒரு வரலாற்றை எழுதுவதில் தவறில்லை என்றாலும், இப்போது அதற்கு என்ன தேவை?

அவருடைய அன்றைய பேச்சிலிருந்தே ஒன்று புரிகிறது! அவரோடு கூடவே, அவர் மனைவியார் திருமதி. ஞானசவுந்தரி அம்மையாரும், மகளும் இன்ன பிற உறவினரும் விடுதலைப் போராட்டத்திலே ஆற்றிய தொண்டு பற்றிக் குறிப்பிட்டபோது, இயற்கையாகவே அவருக்குப் புல்லரிப்பு ஏற்பட்டிருக்கிறது.

இப்படித் தெம்பு ஊட்டும் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வது பற்றி மகிழ்ச்சி தெரிவித்திருக்கிறார்.

ஆகவே அவருக்கு ஒன்று தோன்றியிருக்கும்...... வடக்கே யாரோ தயாரிக்கும் விடுதலை இயக்க வரலாற்றிலே. தொண்டுள்ளம் கொண்ட தொண்டை மண்டலத்துத் தியாகிகளுக்கு உரிய இடம் அளிக்கப்படுமா என்று அவர் அஞ்சி இருக்கவேண்டும். அதன் விளைவே இந்த வரலாறு எழுதும் எண்ணம்.

அண்மையில் நிகழ்ந்த காந்தியார் கொலையைப் பற்றியும், சுபாஷ் சந்திரபோஸ் விபத்து பற்றியும், இன்னமும் முடிவு செய்ய முடியாமல் திணறிக்கொண்டிருக்கிற நிலையில் இப்படிச் சிலராவது முன்வருவது மகிழ்ச்சியே என்றாலும், திரு. பக்தவத்சலனார் சரித்திரத்தை மாற்றி எழுதாமல் இருப்பாரா?

ஏனென்றால் இரண்டாண்டுகளுக்கு முன்னே இந்தியை எதிர்த்து மாணவர் கிளர்ந்தெழுந்தபோது 'பாறைபோல் இருந்து' பலநூறு மாணவர்களைச் சுட்டுக் கொன்று கிளர்ச்சியை அடக்கி அருளிய அருந்தமிழ்ப் புதல்வர் அவர். அப்படிச் சுடப்பட்டோர் தொகையைக் குறைத்துச் சொல்லி பெருமையை நிறைத்துக் கொண்டவராயிற்றே! அதனால் வரலாறு என்ற பெயரில் இல்லாததும் பொல்லாததும் இட்டுக்கட்டி எழுதி விஷத்தைப் பரப்பிவிடுவாரோ என்று ஒரு சந்தேகம்.

எனவேதான் இவ்வளவு சின்னப் பிரச்சினையைப் பற்றியும் இப்படி அக்கறை காட்டத் தோன்றுகிறது.

திப்புசுல்தானைப் பற்றியும், ஹைதர் அலியைப் பற்றியும் வரலாறு எழுதியவர்கள் அவனை ஒரு இந்து மத விரோதி என்றுதானே காட்டினார்கள்.

ஆறும் நூற்றாண்டில் குடையப்பெற்ற மாமல்லபுரத்து மண்டபத்தை — அத்தியந்தகாம பல்லவேஸ்வரக் கிருகத்தை—இன்னமும் 12-ம் நூற்றாண்டு இராமானுசர் பேராலே இராமானுச மண்டபம் என்று சொல்வதிலே பெருமை கொள்பவர்கள் இருக்கிறார்களே, அதனால்தான் இந்தச் சந்தேகம்.

நெப்போலியன் சொன்னபடி, 'வரலாறு என்பது அனைவரும் ஒப்புக்கொண்ட கட்டுக் கதையன்றி வேறென்ன?' என்று அவர் நினைக்கிறாரோ என்னவோ!

★

3-ம் பக்கத் தொடர்ச்சி

லாமல் அவர் எப்போதும் தெளிவான — புத்துணர்வு உடையவராக இருந்தார்!

குழந்தை இயல்புகொண்டு, எளிய தோற்றத்தோடு காணப்பட்டார்.

வெட்டு ஒன்று—துண்டு இரண்டு என்ற வகையில் பதில் சொல்லும் பிற டாக்டர்களைப்போலல்லாமல், அதற்கு முற்றிலும் மாறுபட்டவராக இருந்து அன்பொழுக சிரித்த முகத்தினராய் வினவுகின்ற அனைத்துக்கும் பொறுப்புணர்வோடு பதிலுரைக்கும் பான்மை கண்டேன்.

என்று வியந்து எழுதி இருக்கிறார் ஆங்கில நாளேடு ஒன்றில்.

முதலமைச்சர் அண்ணா அவர்களது இயல்போடு டாக்டர் மில்லரது இயல்பும் ஒரு மிக்க இணைந்து இருப்பது கண்டு இறும்பூதெய்துகிறோம்!

மனம் நிரம்பிய மகிழ்வுக்கிடையே மீண்டுமொரு முறை நமது நன்றியைப் படைத்துக் கொள்கிறோம்!

★

## எழுத்தாளர்களுக்கு

"காஞ்சி" இதழுக்கு அனுப்பப்படும் எழுத்தோவியங்கள், காகிதத்தின் ஒரே பக்கத்தில் மட்டுமே எழுதப்பட்டிருக்க வேண்டும். போதிய தபால் தலை உடன் இணைக்கப்பட்டிருந்தால் மட்டுமே திருப்பி அனுப்ப ஏதுவாக இருக்கும் என்பதையும் எழுத்தாள நண்பர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறோம்.

—ஆசிரியர்

# கேள்வி? பதில்

**1. பெரியார் ஈ. வே. ரா. அவர்கள் இப்போதுதான் முதன் முதலாக வட நாட்டுப் பயணம் மேற்கொள்கின்ருரா?**

இல்லை. சுதந்திரத்திற்கு முன்பு ஜனப் ஜின்னுவைச் சந்திக்க ஒரு முறை சென்றிருக்கிருர். பின்பு, லக்னே பல்கலைக் கழகத்தில் பேசச் சென்று. பலவிடங்களிலும் கருத்து மழை பொழிந்திருக்கிருர். அது சமயம் அவரது பல கூட்டங்களுக்கும் அப்போது தடை விதிக்கப்பட்டிருக்கிறது. இப்போது அதுபோல் ஏதும் நடைபெருது என்று எதிர்பார்ப்போம்!

**2. இரண்டாம் முறையாக நடைபெற்ற ஆந்திர - அரிஜனப் படுகொலை பற்றியும்கூட காமராசர் வாய்திறக்கவில்லையே ஏன்?**

அங்கே என்ன கழக ஆட்சியா நடைபெறுகிறது? போராட்டம் நடத்துவேன் ஜாக்கிரதை என்று எச்சரிக்கை கொடுக்க! அவரது பேச்சுக்கு மதிப்புக் கொடுப்பவர்கள் இங்கேதானே ஐயா இருக்கிருர்கள்!

**3. டெல்லியில் அமைக்கப்படவிருக்கும் திருவள்ளுவர் சிலைக்கு, நாய்களும் நன்கொடைகள் அனுப்பலாமா?**

மெல்ல கேட்கிறீர்களே. உடனே இராஜாராம், டெல்லி முகவரிக்கு அனுப்புங்கள்; அனுப்பச் செய்யுங்கள்!

**4. மொரார்ஜிதேசாயின் அமெரிக்கப் பயணத்திலிருந்து தெரிவது என்ன?**

4-வது திட்டத்துக்குவெளிஉதவியை எதிர்பார்க்க முடியாதென்றும், திட்டமும் பட்ஜெட்டும்கூட இனி மாற்றி யமைக்கப்பட வேண்டும் என்றும் வெளிப்படையாகப் புரிகிறது. உள்ளுக்குள் பொதிந்திருக்கும் பொருளில் இந்தியா, இதுவரை வாங்கி இருக்கும் கடனுக்கு வட்டி கட்டுவதற்குக்கூட வெளியுதவி தேவை என்ற நிலை இருப்பதாகத் தெரிகிறது.

**5. மக்கட் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த பெண்களின் திருமண வயதைஉயர்த்துவதுசரியான முறையா?**

பல வழிகளில் இதுவும் ஒரு முறை என்கிற அளவுக்குதான் இது இருக்க முடியும். வருங்கால சமூகம், ஒழுக்கத்தின்மீது நம்பிக்கைக் கொண்டிருக்க முடியாதென்பதற்கு இவை சரியான எடுத்துக் காட்டுக்கள். ஏதோ ஒரு நாட்டில் எப்போதோ நடைபெற்றதாக ஒரு பழைய நினைவு. அதாவது குறிப்பிட்ட ஆண்டுகட்கு ஆண் பெண் யாரும் திருமணமே செய்துகொள்ளக் கூடாது என்று கட்டுப்பாடு விதித்ததாக! வேதனை மிக்கதொரு செய்தி இது! ஆனல் அரும் பயன் விளையக்கூடும்!

**6. கச்சத்தீவு விஷயமாக பாகிஸ்தான் அமைச்சர் ஒருவர், இலங்கையில் கருத்தறிவித்தது பற்றித் தங்கள் கருத்தென்ன?**

அதிகப் பிரசங்கித்தனம் என்று சொல்லமாட்டேன். இலங்கையிடம் சபாஷ்! பெற்றுச் செல்ல அப்படி ஒருமுறையைக் கையாண்டிருப்பதுடன், இந்தியா - இலங்கையையும், இந்தியா - பாகிஸ்தானுக மாற்ற நாசூக்கான முறையில் ராசதந்திரத்தைக் கையாண்டிருக்கிருர் என்றுதான் சொல்ல வேண்டும்! அதோடு இந்திய அரசின் மெத்தனத்துக்கு 'விழிப்பு' உண்டாக்கவும் அதைப் பயன்படுத்திக் கொள்ளலாமே!

**7. இப்போது காந்தியடிகள் உயிரோடிருந்தால்?...**

இந்தியமக்களின்மீதே போராட்டம் நடத்துவார் என்பதாக ராஜாஜி எழுதி இருக்கிருர்.

**8. சிங்கப்பூரில் உயர்நிலைப் பள்ளிகளில் ஆண்—பெண் உறவு பற்றிய பாடங்கள் போதிக்கப்படுகின்றனவாமே! உண்மையா?**

இதற்காக சினிமாப் படம் எடுத்து விளக்கம் தரலாம் என்ற யோசனை இருப்பதாகத்தான் தெரிகிறது. இன்னும் நடைமுறைக்கு வந்துவிடவில்லை. ஏன், நீங்களும் சிங்கப்பூரில் ஒரு மாணவராகலாம் என்று விரும்புகிறீர்களா?

**9. அழகிகள் போட்டி நடைபெறுவது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

நாகரிகத்தின் உச்சியில் ஊசலாடிக் கொண்டிருக்கும் உலகம், நாசமாகிப்போக இவையெல்லாம் தேவை இல்லை என்ரு நீங்கள் நினைக்கிறீர்கள்?

**10. காமராசர் சுப்பிரமணியத்துக்கு விடுத்திருக்கும் எச்சரிக்கையிலிருந்து தெரிவதென்ன?**

இரண்டு பேரும் இரு வேறு துருவங்களாக இருக்கிருர்கள் என்பதை மறுத்துக்கொண்டு வந்ததும், மேடைகளில் ஒன்ருக அமர்ந்து சிரித்துப் பேசிக்கொண்டிருப்பதுபோல போட்டோக்களுக்குப் 'போஸ்' கொடுக்கப்பட்டவைகளும் தவருன அடிப்படையுடையவை என்று கொள்ளலாமா?

**11. பக்தவத்சலனுர் கேட்கும் 'பிறந்த நாள் பரிசு' கொடுக்கப்படுமா?**

முன்பு தென்சென்னைப் பாராளுமன்றத் தொகுதி இடைத்தேர்தல் நடைபெறவிருந்த நேரத்தில் தான் இவரது பிறந்த நாள் வந்தது. விழா பரிசாக தென்சென்னை "வெற்றி"யைக் கேட்டார்! இப்போதும் கேட்கிருர்! பாவம் பக்தவத்சலம்! வேறு எதையாவது கேட்டிருக்கக் கூடாதோ!

**12. மாநகராட்சித் தேர்தல் நேரத்தில் காமராசர் சுப்பிரமணியத்தைக் கண்டித்திருப்பது தவறில்லையா?**

காங்கிரசுக் கட்சி எந்த அளவில் இருக்கிறது என்று மாநகர வாக்காளர் பெருமக்களுக்கும் சேர்த்தே அவர் எச்சரிக்கை விடுத்திருக்கிருர்! தவறியும் காங்கிரசைத் தேர்ந்தெடுத்து விடாதீர்கள்—ஒரு தொகுதியில்கூட! என்றல்லவா கூறி இருக்கிருர். நன்றிக்குரியவர் அல்லவா காமராசர்!

**13. நிஜலிங்கப்பா, சுப்பிரமணியம் கட்சியா? காமராசர் கட்சியா?**

காமராசர் கட்சி என்றுதான் தெரிகிறது. கோசல்ராம், மகாலிங்கம் போன்ருேர்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்திருக்கிருரே!

**14 "வாடாத ரோஜா" மலர் என்ருல் என்ன?**

"காகிதப்பூ"வாக இருக்குமோ!

★

# KAMALA SUGAR MILLS LTD.,

(GLUCOSE FACTORY)

**Amaravathi Nagar (P.O.) UDUMALPET. S. RLY.,**

COIMBATORE DIST.

★

## LIQUID GLUCOSE "GRADE-A"

WE HAVE STARTED PRODUCTION OF OUR NEW GLUCOSE "GRADE-A" FROM THIS MONTH ONWARDS. THIS GLUCOSE IS PURIFIED BY "DEMINERALISER" WHICH GIVES GOOD COLOUR AND AVOIDS STICKNESS.

SO IT WILL BE A GREAT ADVANTAGE TO THE CONSUMERS OF GLUCOSE LIQUID FOR THE MANUFACTURE OF CONFECTIONARY SWEETS, BISCUITS, SYRUPS AERATED WATERS AND PHARMACEUTICALS.

Our Distributors For Madras, South Arcot, North Arcot and Chingleput Districts:

**P. SINGARAVELU,**
310, Wall Tax Road, Madras-3.

OUR SALES BRANCHES AT:—

MADURAI: 28-B, ELUKADAL AGRAHARAM.
TRICHY: 9, CHINNAKKADAI STREET.
KUMBAKONAM: 84, J. P. KOIL EAST STREET.


ஆசிரியர், வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3
86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.